DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 302/2020

Deposition of witness for P.W. 1

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயசந்திரன் | Caste | : |
| Father/Husband Name | : குழந்தைசாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 06-07-2022

முதல் விசாரணை

1) நான் சூரம்பட்டிவலசில் குடியிருந்துகொண்டு கார் ஒர்க்ஷாப் வைத்துள்ளேன்.

2) 14.3.2020 ம் தேதி என்னுடைய வாடிக்கையாளர் டொயோட்டா இனோவா காரை என்னிடம் பழுது பார்ப்பதற்காக கொடுத்திருந்தார். என்னுடைய ஒர்க்ஷாப்பில் பழுது பார்ப்பதற்காக வைத்திருந்தேன். 16.3.2020 ம் தேதி இரவு வேலையை முடித்துவிட்டு வாகனத்தை நிறுத்தியிருந்தேன். வீட்டிற்கு சென்றுவிட்டு 17 ம் தேதி வந்து பார்த்தபோது அந்த கார் காணாமல் போனது தெரியவந்தது. வாடிக்கையாளரிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது தெரியவில்லை என கூறினார். பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. ஆகவே வடக்கு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது. புகார் அசாஆ **1** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.)** வடக்கு காவல் நிலையத்தில் வாகனம் கிடைத்துவிட்டதாக தகவல் கூறினார். காவல் நிலையம் நானும் வாடிக்கையாளரும் சென்றோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது அந்த வாகனம் தான். **(**அந்த புகைப்படங்கள் அசாபொ **1** வரிசை**,** புகைப்படங்கள் **6** எண்ணிக்கை**)** வாடிக்கையாளர் நீதிமன்றத்தில்

மனு தாக்கல் செய்து வண்டியை பெற்றுக்கொண்டார். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தபோதும் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 302/2020

Deposition of witness for P.W. 2

| | | | |
|---|---|---|---|
| Name | : அண்ணாமலை | Caste | : |
| Father/Husband Name | : கணேசன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 06-07-2022

முதல் விசாரணை

1) நான் அடுக்குபாறையில் குடியிருந்துகொண்டு கார் உதிரி பாகங்கள் விற்பனை செய்யும் தொழில் செய்துவருகிறேன்.

2) அசா 1 ஜெயசந்திரனை எனக்கு தெரியும். அவர் கார் ஒர்க் ஷாப் வைத்துள்ளார். என்னுடைய வாகனம் இனோவா அதனுடைய பதிவு எண் TN 09 BD 5085 14.3.2020 ம் தேதி அசா 1 இடம் என்னுடைய டொயோட்டா இனோவா வாகனத்தை பழுது பார்ப்பதற்காக கொடுத்திருந்தேன். 17.302020 ம் தேதி காலை என்னை தொடர்பு கொண்டு வண்டியை நிறுத்தியிருந்த இடத்தில் காணவில்லை என தெரிவித்தார். இருவரும் பல இடங்களில் தேடியும் கிடைக்கவில்லை. ஆகவே வடக்கு காவல் நிலையத்தில் 20.3.2020 ல் அசா 1 புகார் அளித்தார். எதிரி பிடித்துவிட்டதாக கூறி வண்டி கிடைத்துவிட்டதாக தகவல் கூறினார். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது அந்த வாகனம் தான். நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து வண்டியை பெற்றுக்கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ளது என்னுடைய வண்டிதான். அது ஏற்கனவே அசாபொ **1** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது **.** போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தபோதும் குறுக்குவிசாரணை செய்யவில்லை.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII code of criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, ERODE.

C.C. No. 302/2020

Deposition of witness for P.W. 3

| | | | |
|---|---|---|---|
| Name | : சக்திவேல் | Caste | : |
| Father/Husband Name | : அய்யண்ணன் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 06-07-2022

முதல் விசாரணை

1) நான் சின்னாகவுண்டம்பாளையத்தில் குடியிருந்துகொண்டு எலக்ட்டீரிசியனாக தொழில் செய்துவருகிறேன்.

2) 20.3.2020 ம் தேதி மாலை 3.00 மணிக்கு ஜெயச்சந்திரன் பட்டறை அருகே சென்று கொண்டிருந்தேன். அங்கு போலீசார் மாதிரி வரைபடம் தயார் செய்தனர். சாட்சியாக இருக்க கேட்டனர். நான் பார்வை மகஜரில் கையெழுத்து செய்தேன். அதிலுள்ள 2 வது கையெழுத்து என்னுடையது. பார்வை மகஜர் அசாஆ **2** ஆக குறியீடு செய்யப்படுகிறது**.** என்னுடன் முத்துக்குமார் என்பவரும் கையெழுத்து செய்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

எதிரிகளின் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தபோதும் குறுக்குவிசாரணை செய்யவில்லை**.**